# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 6,970 — 1918 ம் ஞு ஐப்பசிமீ 4 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அம்பலாங்கொடை எலபிட்டி ரோட்டில் மதுக்கு போறதற்கு பாதை என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 10,953. கிராமம்—வத்துகெதிற.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | அலஅத்தறகும்புற .. | புதுரோட்டின் பாகம் | பலப்பிட்டி குடி டேவிட் மெண்டிஸ் குணசேகரா | 0 | 0 | 5·4 |
| 2 | ஷை .. | வயல் .. | ஷை .. .. | 0 | 0 | 2 |
| | | கறன்டெனிய கிராமம். | | | | |
| 4 | எலஅத்தறவத்தை .. | தோட்டம் .. | சுதக்குறு சாதிரிஸ் .. .. | 0 | 0 | 12 |
| 5 | தெம்பிலிகாவத்த .. | தோட்டம் .. | பெத்தாககுறு சதோரிஸ் மற்றவர்கள் .. | 0 | 0 | 2·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஞு ஐப்பசிமாசம் 28 ந் தேதியிலன்று பின்னேரம் 2 மணிக்கு அம்பலாங்கொடை வாடி வீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1918 ம் ஞு ஐப்பசிமீ 1 ந் உ.

ஆர். பி. எலிங்ஸ்,
அரசாட்சி ஏசண்டு.

---

### உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தலகளைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 7,024, அனுராசபுரம்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ஞு (ஒக்டோபர்) ஐப்பசிமீ 4 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம் 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமென்த் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பலாத்த விலாச்சிய கோறளையைச்சேர்ந்த இகலகலேகம்துலானையில் நவக்குளம என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 1 றூட் 17 பேர்ச்சு விசாலமுடையதும் 673 ம் பிரதம்படத்தில் 35½ ம் காணித்துண்டாய்க காட்டப்பட்டதும் சாமானியமாய் நாவககுளம் புரானவெலகேன என்னும் பெயரினால் அறியப்பட்டு அல்லது அழைக்கப்பட்டு வருவதுமான காணி. இதற் செல்லைகளாவன: வடக்கு-நாவககுளம எல; கிழக்கு-கொரதகாமி வெல்விதானையும் மறுபேரும் உரித்தாடும் நாவககுளம புரானவெல; தெற்கு-276,320 ம் உ. ப. ல் காணும் காணி); மேற்கு-நாவக்குளம எல.

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 1765 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[அநுராசபுரம் வி. உ. 43—1918.]

---

[அறிவித்தல் இல. 7,025, களுத்துறை.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணி அல்லது காணிகளில் ஏதும் உடந்தை யுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1918 ம் ஞு (ஒக்டோபர்) ஐப்பசிமீ 4 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே களுத்துறைக் கந்தோரில் மேல்மாகாணம் களுத்துறை உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது ஒன்றிலேனுக்கும் அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் அல்லது அப்படிப்பட்டவர்கள் முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

சி. வி. பிறேயின்,
களுத்துறை உதவி அரசாட்சி ஏசென்று.

குறித்த காணிகளின் விபரம்.

மேல்மாகாண கழுத்துறை டிஸ்திறிக் பஸ்டன் கோறளை கிழக்கு கங்கவோட்டபற்று மகாகம கிராமத்திலிருக்கும் அணைத்திருக்கும் படப்பிரதிகளில்* காட்டியபடி கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபட இலக்கம் 16,005.

| துண்டு. | நிலத்தின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 2 | மஸ்யிலியடகொடக்கலே (ஆத்துக்காக சேமிக்கப்பட்டது) | 1 1 36 |

எல்லைகளாவன: வடக்கு-318,667 ம் உருமைப்படத்தில் காட்டிய நிலம்; கிழக்கு-தண்ணீர் வாய்க்கால்; தெற்கு-கொளகல்இல; மேற்கு-கொளகலஇல், முடிக்கு சேர்ந்த மஸ்யிலியடகொடக்கலே.

II.—பிரதமபட இலக்கம் 16,005.

| துண்டு. | நிலத்தின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 3 | பத்கெலியா கொடல்ல (நெற்காணிக்காக சேமிக்கப்பட்டது) | 0 1 26 |

எல்லைகளாவன: வடக்கு-அறம்வகே அகோனிஸ் பறுநான்துவாஅம் மற்றவர்களாலும் உருத்தாடப்படும் வோரு ஊ ஏசைகும்புற அல்லது மல்வெஸ்சாவ; கிழக்கு-130,555 ம் உருமைப்படத்தில் காட்டிய நிலம், அறம்வகே அகோனிஸ் பறுநான்துவால் உருத்தாடப்படும் குறுந்துகாகொடலவத்தை; தெற்கு-318,885 ம் உருமைப்படத்தில் காட்டிய நிலம்; மேற்கு-318,885 ம் உருமைப்படத்தில் காட்டிய நிலம் முடிக்குசேர்ந்த பத்கெலிகொடல்ல.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1766 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

அரசாட்சியாரால் எடுத்துக்கொள்ளப்படும் உரிமைப்பேசப்படாத காணி.

இத்துடன் அணைத்திருக்கும் டாப்பில் காட்டப்படுகின்றவும், மத்திய மாகாணத்து கண்டி டிஸ்திறிக்கில் யட்டிநுவரைப்பகுதியில் கண்டிப் பட்டண நகரசங்க எல்லைக்குள்ளிருக்கும் "அப்பர் லேக்" றோட்டிலிருந்து றேஸ்வீத் தோட்டத்துக்கும் வேறு தோட்டங்களுக்கும் போகிற றோட்டுக்கணித்தாயும் "காசில்கில்" கொட்டகைக்குக்கிட்டவும் இருக்கின்றவும், அரசாட்சிக்குச் சேர்க்கப்பட்டிருப்பதுமான இரண்டு ஏக்கர் இரண்டு றூட் பதின்மூன்றுபேர்ச் விஸ்தாரமுள்ள துண்டுக்காணி சென்ற எட்டு வருஷங்களுக்கு மேற்பட சொந்தக்காரரினால் கைவிடப்பட்டிருப்பதாகத் தோற்றப்படுகிறபடியாலும், கவனமாகவும் நியாயமாகவும் விசாரணைசெய்தும் அச்சொந்தக்காரரைக் கண்டுபிடிக்கப்படாமையாலும், இதனால்சகலரும் அறியவேண்டியது என்னவென்றால் மத்திய மாகாணத்து அரசாட்சி ஏசண்டர் சாள்ஸ் ஸ்ருவாட் ஆகிய நான் 1887 ம் ஆண்டின் 4 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தினால் எனக்குக்கொடுக்கப்பட்ட தத்துவத்தின்பேரினாலும், அதியுத்தம தேசாதிபதியின் ஆக்ஞையின்படியும், 1919 ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 30 ௳ தேதியிடி அல்லது அதற்கு முன்பாக அக்காணியின் சொந்தக்காரரினால் அல்லது உரித்தாளிகளினால் உரித்து ஸ்தாபிக்கப்படாவிட்டால், மேற்படி கட்டளைச்சட்டத்தின் இரண்டாம் பிரிவின் பிரகாரம் அக்காணி அரசாட்சியாரால் திரும்பச் சுதந்தரமாக்கிக்கொள்ளப்படுமென்று விளம்பரப்படுத்துகிறேன்.

சீ. எஸ். வோன்,
அரசாட்சி ஏசண்டு.

கண்டிக் கச்சேரி, 1918 ம் ௵ ஆகஸ்டுமீ 29 ௳ திகதி.

குறிக்கப்பட்ட டாப்பு.

48,708 ம் இலக்க உரிமைப்படத்தில் விவரிக்கப்பட்ட 66 ம் இலக்கக் காணித்துண்டு. எல்லைகளாவன: வடக்கு-67 ம் இலக்கக் காணித்துண்டு (48,814 ம் இலக்க உரிமைப்படம்); கிழக்கே-42 ம் இலக்கக் காணித்துண்டு (47,494 ம் இலக்க உரிமைப்படம்). 41 ம் இலக்கக் காணித்துண்டும் (47,404 ம் இலக்க உரிமைப்படும்); தெற்கே-65 ம் இலக்கக் காணித்துண்டு (48,707 ம் இலக்க உரிமைப்படம்); மேற்கே-றேஸ்வீத்தோட்டத்துக்கும் வேறு தோட்டங்களுக்கும் போகிற றோட்டு.

விசாலம்: 2 ஏக்கர் 2 றூட் 13 பேர்ச்.

1845 ம் ஆண்டு அக்டோபர்மாதம் 22 ௳ திகதியில் அரசாட்சியாரால் கௌரவ டீ. எவ். வோட்டெஸ்கு அவர்களுக்கு விற்கப்பட்டது.

---

தொழிலுக்குப்படாதவரின் அறிவித்தல்.

நொத்தாரிசுவாய் நியமனமாவதற்கு விண்ணப்பம்.

களுத்துறை கட்டுக்குருந்தே தற்காலம் கேகாலை ஹேவாதந்திரிகே மார்ஷல் பீரிஸ் ஆகிய நான் 1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கக் கட்டளைச்சட்டப்படி 1 B அட்டவணையின் 2 ம் பிரமாணத்தின் பிரகாரம் கேகாலை டிஸ்திரிக்கில் சிங்கள பாஷையில் நொத்தாரிஸ் உத்தியோகம் நடத்தப் பதிவுகாரியகர்த்தர் அவர்களுக்கு. இதற்கு மூன்று மாதங்களின் பின் மனுப்பண்ண யெண்ணியிருக்கிறேன் என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

எச். எம். பீறிஸ்.

கேகாலை, 1918 ம் ௵ செப்டெம்பர்மீ 27 ௳.

---

அம்பலம்கொடை பொல்வத்தை இடத்திலிருக்கும் கலகாவடுகே மிகெல் பிறநெண்டு வாகிய நான் 1907 ம் ஆண்டு 1 ம் கட்டளைச்சட்டத்தின் 1 B செடியில் 2 ம் பிரிவின்படி இன்று அவர்க்கம் மூன்று மாசத்திற்குப்பின் கனம் றெஜிஸ்றிரர் ஜெனறல் அவர்களிடங் களுத்துறை டிஸ்திறிக்குச் சிங்களம் நொத்தாரிஸ் வேலை செய்வதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டிருப்பதை இதனால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

எச். எம். பிறநெண்டு

அம்பலம்கொடை. பொல்வத்தை,
1918 ம் ௵ செப்டம்பர்மீ 23 ௳.

---

1907 ம் ௵ முதலாம் நம்பர் சட்டத்தின் எட்டாம் பிரிவில் கண்டபடி றெஜிஸ்டர் ஜெனரல்துரை அவர்களுக்கு என்னை, சிலாபம், டிஸ்திரிக்கில் சிங்களப்பாஷையில் நொத்தாரிஸ் வேலை பார்க்க விடும்படி மூன்று மாசத்துக்குப் பின் விண்ணப்பம் செய்ய எண்ணியிருக்கிறேன் என்பதை குருணாகல் டிஸ்திரிக் மாக்கந்துரையிலிருக்கும் ரங்காமி ஏறேத முதியான்சலாகே ஆகிய நான் இத்தால் அறிவிக்கிறேன்.

ஆர். எம். ஏறேத்.

மாக்கந்துரை,
1918 ம் புரட்டாதிமீ 28 ௳.

---

இன்றையிலிருந்து மூன்று மாதத்திற்கு பின், கண்டி நகர சங்கத்திற்குச் சேர்ந்த கொழும்பு வீதி 14 ம் நம்பர் வீட்டிலிருக்கும் அப்புஹாமி தனசேகர அமரசிங்ஹ வாகிய நான் 1907 ம் ஆண்டின் 1 வது ஆடினன்ஸ் 8 வது பிரிவுபடி பதிவுகாரியகர்த்தர் அவர்களுக்கு என்னை கண்டி டிஸ்திறிக்கில் சிங்களபாஷையில் நொத்தாரிஸ் வேலைபார்க்க விடும்படி விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேன் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

ஏ. டி. அமரசிங்ஹ.

கண்டி, 1918 ம் ௵ ஒக்றோபர்மீ 1 ௳.

---

1907 ம் ௵ முதலாம் நம்பர் சட்டத்தின் எட்டாம் பிரிவில் கண்டபடி றெஜிஸ்டர் ஜெனரல் துரை அவர்களுக்கு என்னை குருணாகல் டிஸ்திரிக்கில் சிங்கள பாஷையில் நொத்தாரிஸ்வேலை பார்க்க விடும்படி மூன்று மாசத்துக்குப்பின் விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேன் என்பதை நீர்கொழும்பு கோவின்ன வள்பொள கங்காணமளாகே டொன் ஜேம்ஸ் த அல்விஸ் ஆகிய நான் இத்தால் அறிவிக்கிறேன்.

டபிள்யு. டீ. ஜே. ட அல்விஸ்.

கோவின்ன,
1918 ம் ௵ புரட்டாதிமீ 28 ௳.

---

1907 ம் ஆண்டு முதலாம் நம்பர் சட்டத்தின் எட்டாம் பிரிவில் கண்ட படி றெஜிஸ்றிரர் ஜெனறல்துரைஅவர்களுக்கு என்னை மன்னார் டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையில் நொத்தாரிஸ் வேலை பார்க்கவிடும்படி மூன்று மாசத்துக்குப்பின் எண்ணியிருக்கிறேன் என்தை குருணாகல் டிஸ்திறிக், மாக்கந்துரையிலிருக்கும் சாமலாமி முனசிங்ஹ வாகிய நான் இத்தால் அறிவிக்கிறேன்.

டபிள்யு. எச். முனசிங்க.

மாக்கந்துரை,
1918 ம் ௵ செப்டம்பர்மீ 28 ௳.